ஈழநாதம்
EELANATHAM
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 08
நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 06 | 20-05-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 91

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)

# கனத்த மழையின் அனர்த்தத்திற்கு பலியானோர் 300க்கு மேலென அச்சம்!

## ஒரு லட்சத்துக்கு மேல் வீடுகள் சேதம்

(கொழும்பு)

**தென்னிலங்கையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை, களுத்துறை மாவ ட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, மண் சரிவினால் முந்நூறு க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக அஞ்சப்படுகிறது. இதுவரை 127 பேர் பலியாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பலர் காணாமல் போயிருப்பதால் இறந்தோர் தொகை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு லட் சத்துக்கு மேற் பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. இரண்டரை லட்சத்துக்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர்.**

இந்த மாவட்டங்களில் இரத்தின புரியிலேயே வெள்ளப்பாதிப்பு அதிகமாக இடம்பெற்றிருக்கின்றது. இரத்தினபுரி நகர்ப் பகுதியில் வெள்ள நீர்மட்டம் பத்து அடிக்கு மேல் பாய்கின்றது. குடியிருப்புக்கள் எங்கும் வெள்ளம் புகுந்துவிட்டதால் குடியிருப்புக்களின் கூரைகள் மட்டுமே ஆங்காங்கே கண்ணுக்கு புலப்படுகின்றன. இங்கு மண்சரிவு ஏற்பட்டு 80க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

முக்கிய ஆறு ஒன்றின் குறுக்காக மண்சரிவு ஏற்பட்டு நீர் வெளியேற முடியாததால் வெள்ள நீர்மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் வடிய ஆரம்பிக்கும் போது களுத்துறை மாவட்டத்தின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை காரணமாக களுகங்கை கடலோரம் சங்கமிக்கும் முகத்துவாரம் பகுதியை அகலமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.. களுகங்கை வடி நிலப்

(08ஆம் பக்கம் பார்க்க)





வெள்ளத்திற்கு பலியான ஒருவரின் சடலம் எடுத்துவரப்படுவதையும், காயமடைந்த ஒருவர் தூக்கிவரப்படுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

## இந்தியா, நோர்வே சிறிலங்காவிற்கு உடன் உதவி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ள அழிவுகளைக் கருத்தில் கொண்டு நோர்வே, இந்தியா மற்றும் ஐ.நா. சபை உதவி அளிக்க முன் வந்துள்ளன.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் அந்த நாட்டின் உடனடி உதவித் தொகையாக 95 மில்லியன் ரூபாவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கையளித்துள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பெண் படுகாயம்

மட்டக்களப்பில் நேற்று இரண்டு கைக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இனந்தெரியாத நபர்களினால் வீடொன்றின் மீது வீசப்பட்ட இரண்டு கைக்குண்டுகளும் வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்படும் அதே வேளை சேத்துக்குடா பகுதியில் வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கைக்குண்டு வீச்சில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

## - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட -
## தென்பகுதிமக்களுக்கு வழங்க கிளி.மன்னாரில் பொருள்சேகரிப்பு

(கிளிநொச்சி)

தென்னிலங்கையில் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ பொருட்களை சேகரிக்கும் பணியில் கிளிநொச்சி, மன்னார் தமிழர் எழுச்சிப் பேரவையினர் ஈடுபட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் பெரு வெள்ளம் காரணமாக பெருமளவு வீடுகள் அழிந்தும் பல லட்

(08ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் விநோதன் உட்பட 18 மாவீரர்கள் நினைவு நாள்

மட்டக்களப்பு தரவை விசேட அதிரடிப்படைமுகாம் மீது விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலின் பொழுது வீரச்சாவடைந்த போராளிகளின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தத்தாக்குதலில் லெப். கேணல் விநோதன் உட்பட 18

(08ஆம் பக்கம் பார்க்க)



தரவையில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம்

## வலிகாமம் வடக்கு மக்கள் இன்று செயலகம் முன்மறியல் நடத்த முடிவு

(வடமராட்சி)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி யாழ்.செயலகம் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று இடம் பெறும் இப்போராட்டத்துக்கு வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் தங்கி இருக்கும் மக்கள் ஒன்று திரண்டு சென்று இந்த மறியல் - போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப்போராட்டத்துக்கு யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துக் கலந்து கொள்ள உள்ளன. (27)

## முழுமையான நிதி நிர்வாக கட்டமைப்பு அமைத்து புலிகளுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட வேண்டும்

### சிறிலங்காப் பிரதமரிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

டோக்கியோவில் கோடிக்கணக்கான டொலர்கள் கொடுக்கப்படுகின்ற ஒரு பாரிய மாநாட்டில் அதிருப்தியான அவநம்பிக்கையான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் எப்படிக் கலந்து கொள்வது? எனவே, அதற்கு முன்பு இவற்றையெல்லாம் சீரமைத்து ஒரு முழுமையான நிதி நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அமைத்து அதில் புலிகள் பாரிய பொறுப்பை ஏற்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம் என சிறிலங்கா பிரதமருடனான நேற்றைய சந்திப்புக் குறித்து கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று கிளி. வருகை தருவர்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்று கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் நேற்று பிரதமரையும், நோர்வேயின் சிறிலங்காவுக்கானதூது வரையும் சந்தித்துப்பேசி இருந்தனர். தொடர்ந்து இன்று இவர்கள் கிளிநொச்சிக்கு வரவுள்ளனர். (25)

## வரிவிளம்பரம்


### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.
ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி. (3256)

### தேவை

தேர்ச்சி பெற்ற சமையலாளர் தேவை. சம்பளம் பேசித்தீர் மானிக்கலாம். தீன்சுவையகம், கண்டி வீதி, மாங்குளம். (சி-7873)



# அறிவித்தல்

## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோயில்

09.06.2003 அன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்பாளின் வருடாந்தப் பொங்கல் உற்சவத்தன்று கோயிலடியில் காவடிகள் வாடகைக்கு விடுவோர் , காவடிக்கு மேளம் முழக்குவோர் யாவரும் முற்கூட்டியே கோயிலடியில் அமைந்திருக்கும் பொங்கல் கால கரும பீடத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து அனுமதி பெற்றுக்கொள்ளவும் இப் பதிவுகள் 20.05.2003 தொடக்கம் 30.05.2003 வரை மேற்கொள்ளப்படும். பிந்திவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. குறித்த அனுமதியின்றி எவரும் கோயிலடியில் மேற்படி சேவைகள் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆலய பரிபாலன சபை,
வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோயில்.

(சி-8116)

# இந்தியாவில் கல்வி பயிலுங்கள்

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட கார்டன் சிட்டி கல்லூரி

உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி மாத்திரம் போதுமானது.

## 2003 ஆண்டு அனுமதி

| பாடநெறி | | காலம் |
|---|---|---|
| B.Sc. Computer Science | B.Sc. (comp) | 3 வருடம் |
| Bacherior of Computer Application | B.C.A. | 3 வருடம் |
| B. Com Computer | B.Com | 3 வருடம் |
| Bacherior of Business Management | B.B.M. | 3 வருடம் |
| Bacherior of Hotel Management | B.H.M. | 4 வருடம் |
| B.A. Journalism | B.A. (Jour) | 3 வருடம் |
| B.Sc. Fashion & Apparel Design | B.Sc. (F.A.T) | 3 வருடம் |
| B.Sc. Microbiology | B.Sc. (Micro) | 3 வருடம் |
| B.Sc. Genetics | B.Sc. (Gen) | 3 வருடம் |
| B.Sc. Biotechnology | B.Sc. (Biotech) | 3 வருடம் |
| Bacherior of Physiotherapy | B.P.T. | 4 வருடம் |
| Master of Business Administration | M.B.A. | 2 வருடம் |
| Master of Turism Administration | M.T.A. | 2 வருடம் |
| Master of Social Work | M.S.W. | 2 வருடம் |
| Master of Computer Application | M.C.A. | 3 வருடம் |
| M.Sc. Microbilogy | M.Sc.(Micro) | 2 வருடம் |
| M.Sc. Physiotherapy | M.P.T. | 2 வருடம் |
| M.Sc. Biochemistry | M.Sc.(Biochem) | 2 வருடம் |
| M.Sc. Bio - Technology | M.Sc. (Biotech) | 2 வருடம் |

நேர்முகத் தேர்வு 25, 26, 27 ஆம் திகதிகளில் உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

## திருமதி நளினி சிவகுமாரன்

19, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு - 06.
தொலைபேசி : 365360, 503138, 0777- 383846. (3271)


# கிளி. ஏ-9 வீதியோரத்தில் குவிக்கப்பட்டுள்ள இரும்புக் கழிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியோரத்தில் கிளிநொச்சி நகரப் பகுதியில் பாவனைக்கு உதவாது கழிக்கப் பட்டுள்ள இரும்புகள் ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ளன.

கிளி. நகரப் பகுதிகளில் கழிவுகள் தினமும் அகற்றப்படு கின்ற போதும் இக்கழிவு கள் அகற்றப்படவில்லை. பழைய இரும்புகள் அகற்றுப்பட்ட போதும் வீதியில் இருந்து 20 மீற்றர் தொலை வில் குவியல்களாக உள்ள இந்த பழைய இரும்புக் குவியல்கள் அக ற்றப்படாது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# 340 மி. மீற்றருக்கும் கூடுதலான மழை இரத்தினபுரிப் பகுதியில் கொட்டியது

(கொழும்பு)

கடும் காற்றுடன் கூடிய மழை குறைந்து வருவதாக சிறிலங்கா வளிமண்டல திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆயினும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக்காற்று காலநிலை காரணமாக வரும் நாட்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். கடந்த சில நாட்களில் பெய்ததைப் போன்று கடும் மழை பெய்யமாட்டாது என்றும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகவே கடந்த சில நாட்களாகக் கடும்மழை பெய்தது குறிப்பிடத்தக்கதாகும். 340 மி. மீற்றருக்கும் கூடுதலான மழை கடந்த சனிக்கிழமை இரத்தினபுரிப் பகுதியில் பெய்துள்ளது. ஆகக் கூடுதலான மழை வீழ்ச்சியுள்ள 1947 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அளவிலும் பார்க்கக் கூடுதலான அளவு மழைவீழ்ச்சியை இது காட்டியுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலர் கூறியுள்ளார்.


## 31 ஆம் நாள் நினைவலைகள்

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் சந்நிதியில் |
|---|---|---|
| 20 - 02 - 1968 |  | 20 - 04 - 2003 |

### திரு.வேலாயுதம் தெய்வேந்திரம் (பெரியதம்பி)

A.K.R. கமம், 5ஆம் வாய்க்கால்,
கரடிப்போக்கு , கிளிநொச்சி.

நதிபோல் எம் மனங்களில்
நீண்டு நீ வளர்ந்தாய்
மதிபோல் குடும்பத்தில் - அன்பின்
ஒளி விளக்காய் ஒளிர்ந்தாய்
விதி என்ற வலையில் - நீ
வீழ்ந்தாயோ? உறவே! - நாம்
கதி கலங்கிக் கண்ணீர்
ஆறாய்ப் பெருக உருகுகிறோம்.
மதிபோன்ற உன் திருமுகத்தை
மீண்டும் காண்டாற.

20-05-2003 இன்று எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.மு:
கமல் திரையரங்கு,
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி. (3268) குடும்பத்தினர்.

## லெப். கேணல் ராதா அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு நாள்

முன்னாள், யாழ்., மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி

### லெப். கேணல் - ராதா
### கனகராஜபதி - ஹரிச்சந்திரா

வண்ணார்பண்ணை - யாழ்ப்பாணம்.

ராதா....
சிரித்திடும் சிரிப்புடன் செருக்களம் சென்றவன்
வஞ்சகர் நெஞ்சினில் உயிர்ப் பயம் கொடுத்தவன்
கழுகுக்கு முதன் முதலில் சாவு மணி அடித்தவன்
தலைவனின் நெஞ்சத்தில் தனியிடம் பிடித்தவன்.

சம்பவம் :
கட்டுவனில் இலங்கை இராணுவத்தினருடனான சமரில்.......

பிறப்பு
22 - 12 - 1956



வீரச்சாவு : 20 . 05 . 1987

(3270)

லெப். கேணல் ராதா
வான் காப்புப் படையணி

# இந்தோனேசிய சமாதானப் பேச்சுக்கள் முறிந்தன;

# இராணுவ நடவடிக்கைக்கு சனாதிபதி உத்தரவு!

## ஆர்ஷே மாகாணத்தில் கடும் மோதல்

**இந்தோனேசிய அரசிற்கும் ஆர்ஷே மாகாண தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்று வந்த சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளன. டோக்கியோவில் நடைபெறுவதாக இருந்த பேச்சுக்களிலிருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேறுவதாகத் தீவிரவாதிகள் அறிவித்த நிலையில் அங்கு நேற்று முதல் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.**




இந்தோனேசிய சனாதிபதி மேக வதி சுகர்னோபுத்திரி இராணுவச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து இந்தோனேசிய இராணுவம் ஆர்ஷே மாகாணத்தில் தீவிரவாதிகள் மீது நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளன.

சுமத்திராவின் வடமுனைக்குப் பொறுப்பு வகிக்கும் ஆர்ஷே இராணுவத் தலைவருக்கு அதிகாரம் தரும் உத்தரவையும் சனாதிபதி பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவு 06 மாதங்களுக்குச் செல்லுபடியாகும். அத்துடன் இது மேற்கொண்டும் நீடிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

ஆர்ஷே மாகாணத்தில் தீவிரவாதிகள் மீது இந்தோனேசிய விமானப்படையும் நேற்றுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

சுயாட்சியை ஒப்புக்கொள்ளுமாறு இந்தோனேசியா வற்புறுத்திய போதும் ஆர்ஷே மாகாணத் தீவிரவாதிகள் தனிநாடு கோரும் போராட்டத்தை நடத்திவருகின்றார்கள்.

பன்டாவிலுள்ள இஸ்கன்டர் மூடா விமான நிலையத்திற்கு அருகாமையில் பரசூட் மூலம் இராணுவ வீரர்கள் விமானத்திலிருந்து தரையிறங்கியுள்ளனர்.

இராணுவ அதி காரி ஒருவர் கூறுகையில்; அந்த மாகாணத்தின் 06முனைகளிலிருந்து தீவிர வாதிகள் மீது தாக குதல் நடத்த இராணுவம் தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

டிசம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட இருதரப்பினருக்கிடையிலான சமாதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, டோக்கியோவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.



இஸ்கன்டர் முடா விமான நிலையமருகே ஹெர்குலிஸ் விமானம் மூலம் தரையிறக்கப்பட்ட படையினர் நகர்கின்றனர்.

ஆர்ஷே மாகாணம் எண்ணெய் வளம்கொண்டதாகும். அதன் இறைமையையும் இந்தோனேசியாவே கொண்டிருக்கும் நிலைப்பாட்டை ஆர்ஷே அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

ஆர்ஷே மாகாணத்தில்27 ஆண்டுகளாகத் தீவிரவாதிகள் அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வந்துள்ளனர்.

இறுதி முயற்சியாக இந்த விடயத்தில் ஐ.நா சபை தலையிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### மூன்று அமெரிக்க படையினர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் அமெரிக்க படையைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததோடு நான்குபேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் துப்பாக்கியினால் சுடப்பட்டும் ஏனையோர் வாகன விபத்துக்களிலும் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### காஷ்மீரில் தாக்குதல்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஐசூரி மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த்தாக்குதலில் 06 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, கண்மூடித்தனமாகச் சுட்டமையினால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இத்தாக்குதலில் ஒரே வீட்டில நித்திரையில் இருந்த 04 பெண்கள்,02சிறுவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

## வாயுதாங்கி வெடிப்பில் இருபது பேர் உயிரிழப்பு!

### தலைநகரில் அனர்த்தம்

( டெல்அவிவ்)

இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் வாயு தாங்கி வெடித்ததில் 20 பேர் உயிரிழந்ததுடன் 20க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உணவு விடுதி ஒன்றுக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக இஸ்ரேல் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதலால் அல்லது விபத்தா என்பது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சர்வதேச பயங்கரவாதம் தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் கூடி ஆராய்வு

### குடியேற்ற சட்டங்களிலும் மாற்றம் வரலாம்

(மட்ரிக்)

சவுதி அரேபியாவைத் தொடர்ந்து மொரோக்கோவிலும் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளமையையடுத்து அதன் அண்மையிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் அவசரமாகக் கூடி, ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சவுதி அரேபியா தலைநகர் றியாத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பையடுத்து, மொறோககோ கட்டுலங்கா நகரிலும் குண்டு வெடிப்பு ஏற்பட்டு 41 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த இருவேறு சம்பவங்களுக்கும் ஒஸாமா பின்லேடனின் அல்-கொய்தா இயக்கமே காரணம் எனக் கருதப்படுகின்றது.

இந்நிலையில் மொறோக்கோவின் அருகிலுள்ள ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் நேற்று முன்தினம் அவசரமாகக் கூடி ஆலோசனை நடத்தியுள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சர்வதேச பயங்கரவாதம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. நேற்றும் தொடர்ந்து நடைபெறும் இக்கூட்டத்தில் அகதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது, குடியேற்றச் சட்டங்கள் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப் படும் எனவும் தெரியவருகின்றது.

## பலஸ்தீனத்துடனான எல்லைகளை இஸ்ரேலிய அரசு மீண்டும் மூடியது

### - அரபாத் மீதும் கடும் கண்டனம்


(டெல் அவிவ்)

பலஸ்தீனப் பகுதிகளுக்கான எல்லைகளை இஸ்ரேல் மூடியுள்ளது. இதனை அது நேற்று அறிவித்தது இஸ்ரேலியர்கள் மீதான தொடர் தாக்குதல்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இஸ்ரேலில் இறுதியாக 9 பேரைப் பலிகொண்ட இரண்டு தற்கொலைத் தாக்குதல் சம் பவங்கள் இடம்பெற்றதையடுத்து மேற்குக் கரை காசா ஆகிய பகுதிகளுக்கான எல்லைகள் மூடப்படுவதாக அது அறிவித்தது.

கடைசியாக இடம்பெற்ற இந்த தற்கொலைத் தாக்குதலுக்கு பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தே பொறுப்பு என்று இஸ்ரேல் பிரதர் ஏரியல்சரோன் குற்றம் சாட்டியுள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சர்களும் பாதுகாப்பு அதிகாரிகளும் இந்தத் தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக அவசர கூட்டங்களை நடத்தியுள்ளனர்.



ஐவரிக்கோஸ்ரின் மேற்குப் பகுதியிலுள்ள பனானேயில் ஆயுத மேந்தி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் கிளர்ச்சியாளர்.



ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவுக்கு வெளியே தண்ணீர் எடுத்து வரும் ஈரானிய அகதிச் சிறுமி.

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை ஊழியர் அவலம் நீங்குமா?

வன்னி மாவட்டத்தில் முக்கிய அரச கூட்டுத்தாபனங்களில் ஒன்றான இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் ஒட்டுசுட்டான் கூளாமுறிப்பு ஓடு, செங்கல் தொழிற்சாலை 22 வருடங்களாக நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றிவந்த இத் தொழிற்சாலை சிறிலங்கா அரசுகளின் இனவாத யுத்தத்தினால் 1990ஆம் ஆண்டு முற்றாகச் செயலிழந்து போனது.

அன்று தொடக்கம் இன்றுவரை இத்தொழிற்சாலையில் பணியாற்றிய பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளோ? நிவாரணங்களோ? மாற்றுத் தொழிலுக்கான சூழல்களோ கிடைக்கவில்லை.

இப்பணியாளர்கள் கடந்த ஆண்டுடன் 12 வருடமாகப்படும் துன்பதுயரங்களையும் அவலங்களையும் பலதரப்பட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு அவர்கள் மேல் இதுவரை எவரும் கருணைகாட்டாத நிலையில் அவர்களின் அவலங்கள் அம்பலத்திற்கு வரும் காலமாக இச்சமாதான காலம் உள்ளது. இது தொடர்பாக இத்தொழிற்சாலையில் அலுவலக உத்தியோகத்தராக நீண்ட காலம் கடமையாற்றிய முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கா.குணசிங்கம் என்பவரை நேர்காணடபோது.

**இத்தொழிற்சாலை எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?**

இத்தொழிற்சாலை 1964ஆம் ஆண்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு செக்கோசெலாவாக்கியா நாட்டினால் நிர்மாணிக்கப்பட்டு இதன் உற்பத்தி 1968ஆம் ஆண்டு யூன்மாதம் 20ஆம் திகதி ஆரம்பமானது.

**அப்போது எத்தனை பணியாளர் பணிபுரிந்தார்கள்?**

இத்தொழிற்சாலையில் ஆரம்பத்தில் கிட்டத்தட்ட 150 பணியாளர்கள் பணிபுரிந்தார்கள்.

**இத்தொழிற்சாலையில் மூலப் பொருட்கள் எங்கிருந்து பெறப்பட்டன?**

இத்தொழிற்சாலையின் மூலம் பொருட்கள் முக்கியமாக இதற்குரிய களிமண் கூளாமுறிப்பு எனும் குளத்தில் பெறப்பட்டது. அது தொழிற்சாலையிலிருந்து $^{3}/_{4}$ மைல் தூரத்தில் உள்ளது. மேலும் வனஇலாகாப் பகுதிக்குரிய காட்டிலிருந்து விறகையும் மற்றும் மூலம்பொருட்களான மணலை முள்ளியவளையிலிருந்தும் பெற்றும் உற்பத்தியைச் செய்தார்கள்.

**ஆரம்பத்தில் பெறப்பட்ட உற்பத்திப்பொருட்கள் நுகர்வோரின் தேவையைப் பூர்த்திசெய்ததா?**

ஆம், இத்தொழிற்சாலையில் செய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் சகலபாகங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டன. இதில் தயாரிக்கப்பட்ட நிலஓடு வெளிநாடுகளிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வருமானத்தில் ஊழியர்களுக்கு போனஸ், சலுகைகள் வழங்கப்பட்டது.

**இத்தொழிற்சாலை எத்தனையாம் ஆண்டுதொடக்கம் இயங்காமல் உள்ளது?**

1990 யூன் மாதத்திலிருந்து இயங்காமல் உள்ளது. இங்கு பணிபுரிந்த ஊழியர்கள் அத்தனைபேரும் வேலையற்றவர்களாகத் தமது குடும்ப சீவனத்தை கொண்டுநடத்த முடியாது தவிக்கின்றார்கள் பசிபட்டிணியால்சிலர் இறந்தும்விட்டார்கள்.

**ஏன் இவர்களுக்கு வேதனம் வழங்கப்படவில்லை?**

1990ஆம் ஆண்டு யூன்மாதம் பிற்பகுதியில் இத்தொழிற்சாலை செயலிழந்தது. அதாவது அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட நிலையில் போர்க் காலசூழல்போன்ற காரணங்களினாலும் இதன் நிர்வாகத்தினர் கவனமெடுக்காத காரணத்தினாலும் இத்தொழிற்சாலை வடபகுதியில் அதுவும் வன்னியில் அமைந்ததாலும் இத்தொழிற்சாலையை பராமரிக்கவோ இத்தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் நலன்களை கவனத்தில் கொள்ளவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களிடமும், அரச அதிபர் செயலகங்களிலோ இத்தொழிற்சாலையில் பணிபுரிந்த பணியாளர்கள் பலமுறை தமது இன்னல்களை துன்பங்களை எடுத்துக்கூறியும் அவர்கள் மீது எவ்வித அனுதாபமோ, மனிதாபிமானமோ இல்லாதவர்களாக நடந்துகொண்டார்கள். இதை எண்ணி இங்கு பணிபுரிந்த தொழிலாளர்கள் மிகவும் வேதனையடைகிறார்கள்.

**ஏன் உங்களது ஊதியத்தை பெற்றுத்தர எவரும் முன்வரவில்லை?**

இக்கேள்வியினை நாமும் பலமுறை எமக்குள் கேட்டுக்கொண்டோம். அதற்கானபதில் இதுவரையும் கிடைக்கவில்லை. இனியும் எமது பன்னிரண்டு வருடகால ஊதியத்தையாரும் பெற்றுத்தர முயற்சிப்பார்களா? என ஏங்குகிறோம்.

**இதுசம்பந்தமாகப்பலமுறை பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தும் இதுவரை உங்களுக்கு வேதனம் கிடைக்கவில்லையென அறியும்போது எமக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. இது சம்பந்தமாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் நிறுவனம்போல் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதா?**

ஆம், ஸ்தாபனங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அரச ஸ்தாபனங்கள் எல்லாவற்றிற்கும் சம்பளம், நஷ்ரஈடு, நிவாரணம் போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. அதையிட்டு நாம் மனம் மகிழும் வேளையில் இந்த அரச கூட்டுத்தாபனங்கள் இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபன பணியாளர்களுக்கு மட்டும் இதுவரை காலமும் எந்தவொரு கொடுப்பனவும் கொடுக்கப்படாததையிட்டு மிகவும் மனம் வருந்துவதுடன் தற்கால சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தியாவது எமது பன்னிரண்டு வருடகால சம்பளத்தைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் முன்வருவார்களா என நாம் வேண்டி நிற்கின்றோம்.

**இக்கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா? இது தடைப்பட்டதற்கான காரணம் என்ன வென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.**

இச்சம்பளம் சட்டரீதியாகவோ அல்லது மனிதாபிமானரீதியாகவோ எமக்கு வழங்கப்படவேண்டியதொன்றே. இது வழங்கப்படாததற்கான காரணம் அரசியல் ரீதியான பழிவாங்கல் அல்லது இனவாத பழிவாங்கல் என்றவகையிலாகும். இது வழங்கப்படாததன் காரணம் சம்பந்தப்பட்டவர்கள் இதை ஒரு மனிதாபிமானமாக எடுத்துக்கொண்டு இவ்விடயத்தில் அக்கறை செலுத்தாதது இதற்குரிய காரணமென நாம் நினைக்கின்றோம்.

**இத்தொழிற்சாலை மீண்டும் இயங்கினால் பழைய பணியாளர்கள் பணிபுரிவார்களா?**

மீண்டும் இத்தொழிற்சாலை இயங்கினால் வேலை இழந்த அனுபவம் மிக்க தொழிலாளர்கள் இத்தொழிற்சாலையில் பணிபுரிய காத்திருக்கிறார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**உங்கள் கொடுப்பனவு தொடர்பாகவும் உங்கள் நிலைமைகளைக் கூறியும் அன்றில் இருந்து இன்றுவரை யார் யாருடன் தொடர்புகொண்டீர்கள். அதனால் ஏதாவது முடிவுகள் கிடைத்ததுண்டா?**

மேற்படி எமது சம்பளம் பெறுவது சம்பந்தமாக பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்திலும் அதற்குமுன் ஆட்சி செய்த ஐ.தே. கட்சியிடமும் பலமுறை எழுத்து மூலம் விண்ணப்பித்தும் எமக்குச் சாதகமான பதில் இதுவரை தரவில்லை. அத்துடன் எமது தலைமை காரியால யமான இலங்கை மட்பாண்ட கூட்டுத் தாபனத் தலைவர் அவர்களுடன் தொடர் புகொண்டபோது இதற்கான நிதி தங்களிடம் இல்லையெனவும் நிதி ஒதுக் கீடு வரும்போது உங்களுக்கான சம்பளத்தைத் தரலாமென உறுதியளித்திருந்தார்கள் அதுவும் நடக்கவில்லை. மேலும்அக்கால கட்டத்திலே முல்லைத்தீவு அரச அதிபராகவிருந்த தர்மகுலசிங்கம் அவர்களை பலமுறை நாடினோம். அவர்கூட எமது பரிதாபநிலையை எண்ணிப் பார்க்க முயலவில்லை. அத்தோடு அண்மையில் அரச அதிபராகவிருந்த சுந்தரம் அவர்களை நாடினோம். அவரும் வவுனியாமாவட்ட அரசாங்க அதிபர் கணேஸ் அவர்களிடம் தொடர்புகொண்டு நிவாரணமோ அல்லது சம்பளமோ பெற்றுத்தருவதாகக் கூறினார். அண்மையில் கணேஸ் அவர்கள் புதுக்குடியிருப்பு வந்தபோது மாவட்டத்திலுள்ள மக்கள் தங்கள் குறைகளைக் கூறும்போது நாமும் எமது குறையைக் கூறினோம். செய்து தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார். அதுவும் நடக்கவில்லை.மேலும் எமது தொழிற்சாலையில் பணிபுரிந்த அனைத்து பணியாளர்களின் விபரங் களையும் திரட்டிக் கொடுத்திருந்தோம். இதுவரையும் கிடைக்கவில்லை. மேலும் தற்போது பணியில் இருக்கும் அரச அதிபர் திருமதி சு. எமில்டா அவர்களிடமும் எமது நிலையை எடுத்துக் கூறியதோடு இதற்கான விபரங்களையும் கொடுத்துள் ளோம். இதற்கும் எவ்வித முடிவும் இல்லை. இவ்விடயத்தை விடுதலைப்புலிகள் பொதுநிர்வாக சேவையினரிடமும் எடுத்துக் கூறியுள்ளோம் மேலும் கடந்த கால வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தநிலை காரணமாகச் செயலிழந்த அரச கூட்டுத்தாபனங்கள்.தனியார் துறை நிறுவனங்கள், ஏன் கூட்டுறவுச்சங்கங்கள் எல்லாமே தங்கள் பணியாளர்கள் விடயத்தில் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை கவனம் எடுத்தார்கள் நேசித்தார்கள். இதையிட்டுச் சந்தோசப்பட்டோம். இத்தொழிலை நம்பி, இதுவே அரச தொழில் எனநம்பி வேறு எவ்வித மான வருமானமும் இல்லாமல் கிட்டத்தட்ட 30 வருடங்கள் இந்நாட்டுக்காக உழைத்த உழைபபாளிகளை இந்த அரசும், மற்ற நிறுவனங்களும் சரி ஒரு தூசியாக மதிக்காதது எங்கள் தலைவிதியென்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு இனியாவது பதில் கிடைக்குமா?

*நேர்காணல்:-*
**நா.பார்த்தீபன்**

---

# இடம்பெயர்வால் கடமைக்குத் திரும்பாத அதிபர், ஆசிரியருக்கு மீள்நியமனம் வழங்குக!

## - வடமாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்வு காரணமாக கடமைக்கு சமுகமளிக்க முடியாத அதிபர் ஆசிரியர்களுக்கு மீள் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து இவர்கள் இவ்வேண்டுகோளை விடுத்தனர்.

யாழ்ப்பாணம் வருகைதந்த மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் சந்தித்து இக்கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

பதவியுயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களின் தரத்திற்கேற்ற வகையில் பாடசாலைகளை வழங்குவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஆசிரிய ஆளணி சகல பாடசாலைகளுக்கும் சமமாகப் பங்கீடு செய்ய வேண்டும். அதிபர் வினைத்திறன் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்தல். அதிபர் ஆசிரியர்களுக்கு கணினிக் கல்வியை வழங்குவதற்கான நிலையம் ஒன்றை குடாநாட்டில் அமைத்தல். உட்பட பல கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்துள்ளனர்.

---

# யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பால் அச்சம்!

## - பகலிலும் நடமாட்டம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றன.

ஊறணிப்பகுதியில் வாகன மொன்றுக்கு சேதம் விளைவித்த யானைகள் அப்பகுதியிலுள்ள தென்னம்பிள்ளைகளைப் பிடுங்கி துவம்சம் செய்துள்ளன.

யானைக்கூட்டம் பிற்பகல் வேளையிலும் நடமாடுவதாகவும் இதனால் வீதியில் நடமாடுவது அச்சத்திற்குரியதொன்றாக மாறி விட்டது என்றும் கூறப்படுகிறது.

இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் யானைகள் தென்னை, வாழைமரங்களை சாய்த்தவண்ணம் சேதம விளைவித்து வருகின்றன.

அறிவியல் உலகில்

# பணிச்செயல் முறைமை

- சி.சிவபாலன் -

கடந்தவாரம் நாம் செய்நிரலாக்கல் மொழிகளைப்பற்றிப் பார்த்தோம். இவை ஒருவகை மென்பொருட்களாகும். இவற்றை விட மேலும் இருவகை மென்பொருட்கள் பற்றி முன்னரே இப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைபற்றி விரிவாகப் பார்ப்போம்.

## முறைமைமென்பொருள் (System software)

முறைமைமென் பொருளானது கணினியின் இயக்கத்திற்கு வழிவகுக்கின்ற செய்நிரல்கள் அனைத்தையும் உள்ளடக்கு கின்றது. இது குறிப்பாக கணினியின் வன்பொருள் பகுதிக்கும் இன்னொருவகை மென்பொருளான பிரயோக மென்பொருள் **(Application Software)** களுக்கும் இடையே ஓர் இணைப் பூடகமாகவும் செயற்பட்டு வருகின்றது.

இதிலே பல பிரிவுகள் உள்ளன. இவற்றில் ஒன்று பணிச் செயல்முறைமை **(Operating System)** ஆகும்.

## பணிச்செயல்முறைமை (Operating System)

பணிச்செயல் முறைமையானது கணினியின் ஆற்றல் மிகு செயற்பாட்டுக்குத் தேவையான நிகழ்ச்சித் தொகுப்பை உள் ளடக்குகின்றது. பணிச்செயல்முறைமையானது பலசெயற் பாடுகளைச் செய்கிறது. உதாரணமாக நினைவகத்தைக்கட்




டுப்படுத்தல், தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், வன்தட்டு, மென் தட்டு என்பவற்றை இயக்குதல், அச்சிடும் கருவியை தயாரப் படுத்தல் கோப்பின் பெயரை மாற்றுதல் இவ்வாறு கூறிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொன்னால் கட்டளை களுக்கு ஏற்ப கணினியை இயக்கும் தொழிற்பாடு முழுவதை யும் அதுவே செய்துமுடிக்கின்றது.

இதற்கு உதாரணங்களாக
பிசி டொஸ் **(PC-DOS)**
எம்.எஸ் டொஸ் **(MS-DOS)**
சிபி/எம் **(CP/M)**
விண்டோஸ் என்ரி
விண்டோஸ் 95/98/2000
விண்டோஸ் எக்ஸ்பி.
யுனிக்ஸ்
லினக்ஸ்
என்பனவற்றைக் கூறலாம்.

## டொஸ் (DOS)

பொதுவாக நாம் கணினி குறித்து அறிந்துகொள்ளும் போது டொஸ் எனும் சொல்லை அறிந்துகொள் ளாது இருக்க முடியாது. **Disk Operating System** என்பதன் சுருக்கமே **DOS** ஆகும். பணிச் செயல் முறை மையென்றால் ஆங்கிலத் தில் **Operating System** என அறிந்துள்ளோம். இது வன் தட்டு அல்லது மென் தட்டு **(Disk)** இல் பதிவு செய்து வைக்கப்பட்டிருப்ப தால் இது **Disk Operating System** சுருக்கமாக டொஸ் என அழைக்கப்படுகிறது. இவ் டொஸ்வகைகளில் பிர பல்யமானது எம்.எஸ்.டொஸ் ஆகும். **Micro Softos Disk Operating System** என் பதன் சுருக்கமே **MSDOS** ஆகும். மைக்றோசொவ்ற் என்னும் நிறுவனத்தால் இது ஆக்கப்பட்டதாகையால் அவ் வாறு அழைக்கப்படுகின்றது.




## எம்.எஸ்.டொஸ்சின் வரலாறு

கணித்துறையானது வளர்ச் சியடைந்து புதிய வன் பொருட்கள் கண்டுபிடிக்கப் பட கணினியின் பயன்பாடு அதிகரிக்க "டொஸ்" இலும் அதற்கேற்ப மாற்றங்கள் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே டொஸ்சில் வெவ்வேறு பதிப்புக்கள் **(Versions)** வெளி வந்தன.

உதாரணங்களாக

***DOS** 1.0 ஐ.பி.எம்.பி. சி. கணினிகளுக்காக 1981 ஆகஸ்டில் வெளி வந்து புளொப்பிகளை இயங் கியது.

***DOS** 1.1 (1982 ஒக் டோபர்)

***DOS** 2.0 (மார்ச் 1983)

பல மாறுதல்களைக் கொண்டதாக அப்போதி ருந்த 10**MB** ஹாட்டிஸ் குகளை இயக்கியது.

**DOS** 2.1 (நவம்பர் 1983)

**DOS** 2.0 இலிருந்து பிழைகள் நீக்கப்பட்டு வெளி வந்தது.இவ்வாறு **DOS** 3.0, **DOS** 3.1 எனத் தொடர்ச்சியாக வெளிவந்தன.

***DOS** 5.0 (ஜுன் 1991)

மிகவும் மேம்பாடுடையதாக வெளிவந்த இப்பதிப்பு மைக்றோ சொவ்ற் நிறுவனத்திற்கு பெயரையும் புகழையும் பெரும் வருமானத்தையும் ஈட்டிக் கொடுத்தது. இவ்வாறே **DOS** 6.22 வரை உள்ளது. இங்கு **DOS** என்பதற்குப் பின்னாலுள்ள இலக்கங்கள் புதிய பதிப்புகள் என்பதைக் குறியிட்டுக் காட்டுகிறது.

## விண்டோஸ் (Windows)

கணினி ஒப்பரேற்றிங் சிஸ்ரம் பலவற்றை வெளியிட்டு வந்த மைக்கிறோ சொவ்ற் நிறுவனத்தினர் பயன்படுத்துவதற்கு இலகுவான விண்டோஸ் எனும் புதிய பணிச்செயல் முறை மையை வெளியிட்டது. 1990இல் முதன் முதலில் **Windows 3.0** வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து **Windows** 3.1 வெளிவந்தது. இவற்றைப் பொதுவாக **Windows 3.x** எனக் குறிப்பிடுவர். ஆனால் இவை **DOS**இன் துணை யுடனேயே இயங்கின. இதனால் இவற்றை **Operating system** என்று கூறாமல் **(Operating Enrvirnment)** பணிச் சூழல் என்றே அழைத்தனர்.

ஆனால் **Windows** 95 அவ்வாறிருக்கவில்லை. இதில் **DOS**இன் கட்டளைகள் பல பயன்படுத்தப்பட்டாலும் இது தனித்து **Operating system** ஆக இயங்கியது. இதனை **DOS** 7.0 என அழைப்பவர்களும் உண்டு. **Windows** 95இல் 60 வீதமானவை இதற்கு முன்னர் வெளிவந்த **DOS** 6.22இலிருந்த கட்டளைகளாக இருந்தாலும் ஏனைய விடயங்கள், கட்டளைகள் அதனை விடச் சிறப்பாக இருந்தன.

விண்டோசில் உள்ள மாறுபட்ட அம்சம் என்னவெனில் பயன்பாட்டிற்கு இலகுவானது என்பதாகும். அதாவது படங்கள், குறியீடுகள் போன்ற கட்டளை அடையாள வசதிகளை இது கொண்டிருப்பதால் ஆங்கில அறிவு குறைந்தவர்களாலும் இலகுவாகப் புரிந்து பயன்படுத்தக் கூடியதாக இது இருக் கின்றது.

குறிப்பு:
செய்நிரலாக்கல் மொழிகளின் தலைமுறைகள் குறித்து கடந்த வாரம் குறிப்பிடுகையில் 5ஆம் தலைமுறை மொழி யானது செயற்கை நுண்ணறிவுள்ள ஒரு கணினிக்குரிய மொழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலர் "ஜாவா" போன்ற மொழி களை 5ஆம் தலைமுறை மொழியாகவும் குறிப்பிடுகின்றனர் எனினும் பீற்றர் நொட்டோன் எனும் கணினி நிபுணர் ஜாவாவை மூன்றாம் தலைமுறை மொழியாகவும் செயற்கை நுண்ணறி வுள்ள கணினிக்குரிய மொழியை 5ஆம் தலைமுறை மொழி என்றும் வகைப்படுத்தியிருக்கிறார்.

# ஆயித்தியமலையில் பெண் பரிதாப கொலை; காவல்துறையினரால் சந்தேக நபர் கைது!

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் இளம் பெண் ஒருவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். கை, கால்கள் துண்டிக்கப் பட்டும் வயிறு வெட்டப்பட்டும் கொலை செய்யப்பட்ட இப்பரபரப்பான சம் பவம் மே மாதம் 4ம் திகதி இடம்பெற்றது. ஆயித்தியமலையைச்சேர்ந்த குணரெத்தினம் விக்ரோரியா (17) என்பவரேஇவ்வாறு கொலை செய்யப்பட்டவர் ஆவார். இச்சம்பவம் தொடர் பாகத் தமிழீழ காவல் துறையினர் விசாரணை களை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மேற்படி கொடூரக் கொலை தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. கொலை செய்யப்பட்ட விக்ரோரியா தமது தாயாரோடு ஆயித்தியமலையில் வசித்து வந்துள்ளார். கடந்த மே மாதம் 2ம்திகதி இப்பெண் திடீர் என்று காணாமல் போயுள்ளார். இவரைத்தேடி யும் காணாத நிலையில் மே மாதம் 4ஆம் திகதி ஆயித்தியமலை நெல்லிக்காடு வாவி யில் சடலம் கரைஒதுங்கியது. இச்சடலத் தைக் கண்ட மக்கள் காவல் துறையினிடம் முறையிட்டனர். உடனடியாக விசாரணை களை மேற்கொண்ட காவல் துறையினர் சடலத்தைப்பிரேத பரிசோதனைக்கு உட்படுத் தினர். பெண்ணின் வயிற்றில் இருந்து சிசு வெட்டி எடுக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் வாமன் தெரிவித்துள்ளதாகக் காவல் துறையினர் குறிப்பிட்டுள்ளனர். கைது செய் யப்பட்டுள்ள சந்தேக நபர் திருமணமானவர் எனவும் இவரது மனைவி மத்திய கிழக்கு நாடொன்றில் பணிப் பெண்ணாகத் தொழில் புரிந்து தற்போது வீட்டிற்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வேலைகள் விரைவில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

நிக்கொட் நிறுவனத்தினரால் கிளி. மாவட் டத்தில் புதிய வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இத னடிப்படையில் கிளி. புனித சென்திரேசா மகளிர் கல்லூரியிலும், முரசுமோட்டை ம.வி. யிலும் தலா இரு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் கிளி. அரச செயலகத்தில் சுற்றுலா விடுதி, பூநகரியில் மீனவர்கள் தங்குவதற்கென 4 இடங்களில் 4 விடுதிகள் மற்றும் புதுமுறிப்பு கோணாவில் வீதி யிலுள்ள பாலமும் அமைக்கப்படவுள்ளது.

(சோ)

# நாட்டில் சமாதானம் நிலைபெறாவிடில் எதனையுமே சாதித்து விட முடியாது!

## -நோர்வே தூதரக உயரதிகாரி ஒட்வர் லகிறீட்

(கொழும்பு)

**சமாதானம் இல்லையேல் ஒரு நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்தவோ, அரசியல் உரிமைகளை நிலைநிறுத்தவோ, பொருளாதார அபிவிருத்தியைக் காணவோ முடியாது. ஒரு நாட்டிற்குச் சமாதானம் என்பது மிக முக்கியமானது. இங்கு உரையாற்றும் இந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் சமாதானத்தில் ஏற்பட்டுள்ள தற்காலிகத் தடையைப் போக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை உணர்வீர்கள்.**

**இவ்வாறு நோர்வே தூதரக உயரதிகாரி ஒட்வர் லகிறீட் தெரிவித்துள்ளார்.**

இலங்கை-நோர்வே சமூகம் நோர்வே அரசிலமைப்புத் திட்டத்தையொட்டி, விருந்துபசார விழா கடந்த வெள்ளி நடைபெற்ற போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இலங்கையை ஒரு சமாதான நாடாக மாற்றுவதற்கு நோர்வே சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. இன்றைய அரசியலமைப்புத் தின வைபவத்திலும் கூட கலந்து கொள்ளாமல் பிரதி வெளிவிவகார அமைச்சரும் புதிய தூதுவரும் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளமை இதற்கு எடுத்துக்காட்டு.

முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளைப் போல இலங்கையும் முன்னேற்றம் அடைந்து ஒரு நல்ல நிலையை அடைய வேண்டும்.

அதே போல் இலங்கையின் வளங்கள் யாவும், யுத்த கருவிகள் கொலைக்கருவிகளுக்குச் செலவிடப்படாமல், மக்களின் நன்மைக்குச் செலவிடப்பட வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். நீண்ட காலமாக இலங்கை யுத்தத்தினால் அனுபவித்த துன்பம் போதும்.

இனிமேல் சமாதானத்திற்கான மேம்பாட்டோடு வளர்ச்சியடைந்த நாடாக இலங்கை மாறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

### இலைக்கஞ்சி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட செஞ்சிலுவைச் சங்க வளாகத்தில் இயங்கிவரும் முன்பள்ளியின் மாணவர்களுக்குக் கடந்த மே.5ம் திகதி முதல் சத்துணவுத் திட்ட இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது.

மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்)நிறுவனத்தினரால் மேற்படி மாணவருக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## -மத்திய கிழக்கிலிருந்து வந்தவர்-

# ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பல இலட்சம் ரூபாயை இழந்தார்!

(மட்டக்களப்பு)

மத்தியகிழக்கு நாடொன்றில் கடந்த 03 வருடகாலமாக தொழில் புரிந்துவிட்டு, தனது சொந்த ஊருக்குத் திரும்பியவர், மயக்க பிஸ்கட் சாப்பிட்டமையினால் , ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை, 12,500 ரூபா பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் அடங்கிய பொதியை இழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து காத்தான்குடி புறப்பட்ட பஸ்சில் பயணம் செய்த நபருடன், இருவர் அன்புடன் பழகி பிஸ்கட் சாப்பிடக் கொடுத்தனர்.

இதனால் மயக்கமடைந்த நபர், சிலமணி நேரத்தின் பின்னர் மயக்கம் தெளிந்து பார்த்தபோது தனது அருகில் இருந்த இருவரையும் தனது பொதியையும் காணாமல் தேடியமையையடுத்து உண்மை நிலை தெரியவந்துள்ளது.

# மட்டக்களப்பில் 2003 முதல் காலாண்டில் 92 வாகன விபத்துக்கள்; நால்வர் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் 92 வாகனவிபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் நான்கு பேர் மரணமடைந்துள்ளனர். 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு 45 பேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், 34 வாகனங்களும் சேதமடைந்திருப்பதாக மட்டு பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

துவிச்சக்கரவண்டிகளில் நிரையாகச் செல்வதே விபத்துக்கான பிரதான காரணமாகும். சுமார் எண்பது வீதமான விபத்துக்கள் இதன் காரணமாகவே ஏற்படுகின்றது. எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாகன ஓட்டுனர்களும்,பாதசாரிகளும் மிகவும் அவதானமாகச் செயற்பட்டால் விபத்துக்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மட்டு. பழுகாமம் பகுதியில் சமுர்த்தி வங்கி திறப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பழுகாமம் பகுதியில் சமுர்த்தி வங்கியொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சமுர்த்தி வங்கிகளை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைக்கு அமைய இவ்வங்கி திறக்கப்பட்டுள்ளது. பழுகாமம் சமுர்த்தி வலயப் பிரிவில் 2832 குடும்பங்கள் சமுர்த்தி பெற்று வருகின்றனர். இங்கு சிறு சமுர்த்திக் குழுக்களும், சமுர்த்திச் சங்கமும் செயற்பட்டு வருகின்றன.

இவ்வங்கி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சமுர்த்தி பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்கு கொடுப்பனவுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ் வங்கியின் மூலம் பழுகாமம் பெரிய கோரதீவு, தட்டாப்புறம்,காந்திபுரம் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த சமுர்த்தி பயன் பெறுவோர் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

இவ் வங்கியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் கருணாகரன் உட்பட புலிகளின் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பிரதேச செயலகப் பிரிவுகளில் தேசிய பாடசாலைகள்!

## – கல்வியமைச்சு ஏற்பாடு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் சகல வசதிகளையும் கொண்ட தேசியக்கல்லூரிகள் நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இயங்கி வரும் தேசியக் கல்லூரிகளின் குறைபாடுகளையும் இனம்கண்டு இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பிரதேச மட்டத்தில் தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக் கூடிய வசதிகள் கணினிக் கல்விக்கூடம், விஞ்ஞான கூடம், தொழில்நுட்பக் கூடம், நூல் நிலையம் போன்ற வசதிகள் அனைத்தையும் இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உணவு உற்பத்தி கிணறு திட்டத்தினூடாக மானிய உதவியளிப்பதில் இழுத்தடிப்பு!

## -பயனாளிகள் பெரும் ஏமாற்றம்

உணவு உற்பத்தி கிணறு அமைத்தல் 2002 திட்டத்தினூடாக மானியம் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு இது தொடர்பான கொடுப்பனவு வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் முன்கூட்டியே நிதியுதவி எதுவும் வழங்கப்படாத நிலையில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் கிணறுகளை அமைத்த பயனாளிகள் தமக்கான மானிய உதவி கிடைக்காமையால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். மேலும் இந்த மானிய உதவியைப் பெற்றுக் கொள்ளும் முகமாகக் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக இவ்கள் குறித்த பிரதேச செயலகமும் வீடுமாக பல தடவைகள் அலைந்து திரிந்தும் எதுவித பயனும் அதனால் ஏற்படவில்லை.

சம்பந்தப்பட்ட பிரதேசசெயலக அதிகாரிகளால் ஒவ்வொரு தடவையும் ஏதாவது காரணமோ அன்றி தவணைகளோ தெரிவிக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் நிலையில் பயனாளிகள் மீண்டும் மீண்டும் பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக வந்து ஏமாற்றத்துடனே வீடு செல்கின்றனர்.

பணக் கொடுப்பனவிற்கான அனைத்து நடைமுறைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலும் இக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படாமையையிட்டு இப்பயனாளிகள் மிகுந்த விசனமடைந்துள்ளதுடன் சந்தேகமும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இனியாவது இவ் உதவியை விரைவாக வழங்க ஆவண செய்யுமாறு சம்பந்தப்பட்டோரை இவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

# புலன்குறை சிறுவருக்கு புனர்வாழ்வுத் திட்டம்

## - யுனிசெவ் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு புலன்கள் குறைந்துள்ள சிறுவர்களைப் பிரதேச மட்டத்தில் இனம் கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்றை யுனிசெவ் நிறுவனம் மேற் கொண்டுள்ளது.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு கட்புல, செவிப்புல சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் இந்த நடைமுறை முதல் கட்டமாக அமுல்செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

# செஞ்சிலுவை ஊழியர் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊழியர் நலன் புரிச்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவர் ந.நடராசா, உபதலைவர் பாலகிருஸ்ண முரளி, செயலர் க.ஜெயராணி, பொருளாளர் மு.சந்திரகாந்தி, நிர்வாக உறுப்பினர்களாக க.மாணிக்கராசா, கு.சிவதாசன், செ.அன்பழகி, இ.கோகிலாம்பாள், ந.ஜீவகலா ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றனர். (சோ)

# கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வீதிகளில் ஒரு பகுதியைப் புனரமைக்க நடவடிக்கை!

## -பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 40 வீதிகள் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன. இது தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 10 வீதிகள் புனரமைக்கப்பட உள்ளன. இவ் வீதிப்புனரமைப்புத் தொடர்பான பயிற்சி வகுப்புகள் பின்வரும் ஒழுங்கில் நடத்தப்படவுள்ளது உருத்திரபுரம், சந்தன்குளம், அம்பாள்குளம், விவேகானந்தநகர், கனகாம்பிகைக்குளம், உதயநகர் கிழக்கு,உதயநகர் மேற்கு,மலையாளபுரம் கிராமசேவகர் பிரிவுகளுக்குட்பட்ட வீதிகளின் புனரமைப்புத் தொடர்பாக எதிர் வரும் 22.05.2003 அன்று காலை 8.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலகத்திலும், கோணாவில், கந்தபுரம் ஆகிய பகுதி வீதிகள் புனரமைப்புத் தொடர்பாக கந்தபுரம் உபதபால் அலுவலகத்தில் காலை 8.30 மணிக்கும் வட்டக்கச்சிப் பகுதி வீதி புனரமைப்புத் தொடர்பான பயிற்சி வகுப்பு 23.05.2003 மாலை 2.00 மணிக்கு இராமநாதபுர உபதபாலகத்திலும் நடைபெற உள்ளது.

எனவே பயிற்சி வகுப்புகளில் சனசமூகநிலையம், விவசாயக் குழு, கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் தலைவர், செயலாளர் அனைவரும் கலந்து தமது பகுதி வீதிகளை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கரைச்சிப் பிரதேச செயலர் பொன்நித்தியானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (லோ)

# நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகளின் தொல்லை காரணமாக சிறுபோக நெற்செய்கையாளர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தத் தவறும் பகுதிகளில் கால்நடைகள் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மாவட்ட விவசாயக் குழுவினர் தெரிவித்துள்ளனர் (சோ)

# வெளி இணைப்பு இயந்திரப் படகு போட்டியில் வெற்றி பெற்றோர்

(முல்லை)

முல்லைத்தீவு வண்ணாங்குளம் சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் குருத்துவத் திருநிலைப்படுத்தல் விழாவை முன்னிட்டு வெளி இணைப்பு இயந்திரப்படகுப் போட்டி கடந்த சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு தூய பேதுரு ஆலய முன்றலில் உள்ள கடற் கரையில் ஆரம்பமானது.

மங்கல விளக்கினை முல்லைத்தீவு பங்குத்தந்தை வணபிதா ஜேம்ஸ் பத்திநாதர் ஏற்றினார். நிகழ்வினைக் கடற்புலிகளின் முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன் ஆரம்பித்துவைத்தார்.

9.9 குதிரைவலு கொண்ட யமகா வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட 18 இயந்திரப் படகுகள் போட்டியில் பங்குகொண்டன. முதலாம் இடத்தை செல்வபுரத்தைச் சேர்ந்த தவமும், இரண்டாம் இடத்தை மணற்குடியிருப்பைச் சேர்ந்த கமலும், மூன்றாம் இடத்தை வண்ணாங்குளத்தைச் சேர்ந்த ரகுவும் பரிசினைப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து 15 கோஸ்பவரைக் கொண்ட சுசிக்கி இயந்திரப் படகுப் போட்டியில் 22 படகுகள் கலந்து கொண்டன. இதில் முதலாம் இடத்தை சிலாவத்தையைச் சேர்ந்த திவ்வியனும், இரண்டாம் இடத்தை கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த றொபேட்டும் மூன்றாம் இடத்தை வண்ணாங்குளத்தைச் சேர்ந்த ஜெராட்டும் பெற்றுக்கொண்டனர்.(20)



## சிந்தனைக்கு

அனைத்துத் தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-05-2003

## அரசியல் யாப்பு ஏன்?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று சனாதிபதி பதவிக்கு உரியவராகச் செயற்படுகின்றாரா? அன்றி எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு தலைவர் என்ற ரீதியில் செயற்படுகின்றாரா? என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். ஏனெனில், நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பில், அதிகாரத்தில் இருக்கும் சனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான உறவானது ஆளும் கட்சிக்கும் – எதிர்க்கட்சிக்கும் இடையிலான உறவு போன்றதாகியுள்ளது.

சிறிலங்கா அரசியல் யாப்பானது, அரசாங்கத்திற்கும், சனாதிபதிக்கும் இடையிலான அதிகாரங்களைத் தெளிவாக வரையறை செய்ய முற்படுகின்றது. இதில் சிக்கல்கள், முரண்பாடுகள் ஏற்படின் உயர் நீதிமன்றத்திற்கு விவகாரத்திதைக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. ஆனால், சிறிலங்கா சனாதிபதியும் சரி, பாராளுமன்றமும் சரி தாம் நடத்தும் போட்டி அரசியல் காரணமாக, அரசியல் யாப்பினைத் தமக்குத் தேவைக்கேற்ற விதத்தில் மாற்றிக் கொள்ளவும் அதற்கு விளக்கம் அளிக்கவும் முற்பட்டுள்ளன.

இங்குதான் முக்கியமானதொரு கேள்வி எழுகின்றது. அதாவது அரசியல் யாப்பு என்பது எதற்காக? அதன் பயன்பாடு என்பது எத்தகையது? என்பதாகும். ஏனெனில், சிறிலங்கா அரசியல் யாப்பானது, அதிகாரங்களை சனாதிபதிக்கும் – பாராளுமன்றத்திற்கும் என இரு கூறாகப் பிரிக்கையில் யார் கையில் அதிகாரம் உள்ளது என்ற கேள்வி எழுகின்றது?

சிறிலங்கா போன்ற – மேற்குலகத்தவர்களால் 'சனநாயகம்' புகுத்தப்பட்ட நாடுகளில் இத்தகைய நெருக்கடிகள் ஏற்படுவதென்பது எதிர்பார்க்கத்தக்கதே. ஏனெனில், சிறிலங்கா போன்ற நாடுகளில் சனநாயக ஆட்சிமுறை நடைமுறையில் உள்ளது போன்று – சனநாயகப் பண்புகள், பாரம்பரியங்கள் கொண்ட அரசியல் வாதிகள் இன்று இல்லை. ஏனெனில், அரசியல்வாதிகள் சனநாயகத்துடன் சேர்த்து இறக்குமதி செய்யப்படவில்லை. இங்குள்ள ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், இனவாதிகளாகவும், மோசடிக்காரர்களாகவும் உள்ளனர்.

இந்நிலையில் அரசியல் யாப்பு என்பது ஆட்சி அதிகாரத்தில் நீடித்தல், ஆட்சி அதிகாரத்தைக் கவிழ்த்தல் என்பதற்கானதொரு கருவிகளாகவே அதிகாரத்திலுள்ளவர்களால் பார்க்கப்படுகின்றது. கையாளப்படுகின்றது. இத்தகையதொரு வழிமுறையையே அதிகாரங்களுடன் பதவியிலுள்ள சனாதிபதி சந்திரிகாவும் கைக்கொள்ள முனைகின்றார். அதாவது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு எதிரான தனது அனைத்து நடவடிக்கைகளும் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதென்றே கூறிக் கொள்கின்றார்.

ஆனால், தனது அதிகார வரம்பிற்குட்பட்டதான நடவடிக்கைகள் – அதே அரசியல் யாப்பின் பிரகாரம் இயங்கும் பாராளுமன்றம் – அரசாங்கம் என்பனவற்றிற்கு முரண்பாடானதாக, அதன் செயற்பாடு களைப் பாதிப்பதாக, ஸ்தம்பிக்கச் செய்வதாக இருப்பதை சனாதிபதி கருத்திற் கொள்பவராக இல்லை. இதனால், அரசியல் யாப்புக் குறித்த கேள்வியே எழுகின்றது. அதாவது அரசியல் யாப்பு முரண்பாடுகளைக் கொண்டதா? இவ் அரசியல் யாப்பு ஒரு நாட்டினை நிர்வகிக்க ஏற்புடையதா என்ற கேள்வியைத் தோற்றுவிப்பதாகின்றது.

ஏனெனில், அரசியல் யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள சனாதிபதி அரசாங்கத்தைக் கலைக்கவும், அமைச்சுப் பொறுப்புக்களை பறித்தெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டவராக உள்ளார். இந்நிலையானது நாட்டின் நிர்வாகம் யார் கையில் என்ற கேள்வியை எழுப்புகின்றது. சனாதிபதியே முழுமையான நிர்வாகத்தையும் மேற்கொள்ள முடியுமானால், நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் ஏன்? அமைச்சரவை ஒன்று எதற்காக?

ஆனால், அடிப்படையில் அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரம் என்ற ரீதியில் தான்தோன்றித்தனமான வரையறைகள் ஏதுமற்ற அதிகாரங்களை சனாதிபதிக்கு வழங்குகின்றது என்பது சரியானதல்ல. சனாதிபதிக்கும் – அரசாங்கத்திற்கும் உள்ள அதிகாரங்களை அது வரையறை செய்யவே முற்படுகின்றது. ஆனால், அரசியல்வாதிகள்தான் அதிகார வெறி காரணமாக அரசியல் யாப்பைத் தமது தேவைக்கேற்ப வளைத்துப் பார்க்க முனைகின்றனர்.

எடுத்துக்காட்டாக அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும். இந்நடவடிக்கையானது அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விடயமே என சனாதிபதி தரப்பு கூறிக் கொள்ள முற்படினும், இச்சுவீகரிப்பிற்கான சரியானகாரணியாக அதனைக் கூறமுடியாது உள்ளது. குறைந்த பட்சம் ஊழல், மோசடி என்றோ நிர்வாகத்திறமை என்றோ கூடக் காரணம் கூறமுடியவில்லை.

ஆகையினால் இவ்விடயத்தில் அரசியல் யாப்பு அதிகாரத்தை சனாதிபதி சந்திரிகா துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்றே கொள்ள முடியும். இதனால் இவ்விடயத்தில் அரசியல் யாப்பு எடுப்பார் கைப்பிள்ளை போன்று செயற்பட்டுள்ளது என்றே கொள்ள வைக்கிறது. இந்நிலையில் சிறிலங்கா அரசியல் யாப்பென்பது எத்தகைய பலமானது? அதிகார வெறிகொண்ட அரசியல் வாதிகளிடம் இருந்து மக்களை இதனால் பாதுகாக்க முடியுமா? என்பது இன்று கேள்விக்குரியதே.

# புலிகளை அரசு வஞ்சிக்காது என்பதற்கு அமெரிக்கா, ஜப்பான் உத்தரவாதமளிக்குமா?

## இ.தொ.கா. பிரதித் தலைவர் கேட்கிறார்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டியது அவசியம் என்றுதான் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் கூறி வந்திருக்கின்றன. கூறியவாறே பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முயற்சிப்பார்கள். அழைத்தும் பேசுவார்கள். வாக்குறுதிகளும் தருவார்கள். ஆனால் தந்த வாக்குறுதிகளில் எவையும் நிறைவேற்றப்படுவதில்லை. விளைவு, போராட்டம் வெடிக்கும். மீண்டும் பழைய பல்லவி பாடப்படும். இதுதான் இந்த நாடுகண்ட வரலாறு. இன்றும் அதே நிலைதான் தலைதூக்கியிருக்கிறது. இவ்வாறு இ.தொ.கா. பிரதித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி தெரிவித்தார்.

இன்றைய அரசு விடுதலைப்புலிகளுடன் ஆறு தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளது. பேச்சு வார்த்தையின் போது பல வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால் எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. புலிகளின் ஆதங்கமும் இதுவே. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சனநாயக வழியில் தமிழ் அரசியல்வாதிகள் பல தடவைகள் முயன்றனர். ஒப்பந்தங்கள் கூடச் செய்யப்பட்டன. ஆனால் நடந்தது என்ன?

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு நேர்ந்த அதே அனுபவம் தங்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே புலிகளின் நிலைப்பாடு ஆகும். எனவேதான் இன்றைய இந்த இழுபறி நிலை. இந்த இழுபறிக்கு முடிவுகட்ட இன்னமும் காலம் கடந்து விடவில்லை. சர்வதேச சமூகத்தின் வழிகாட்டலோடு இரு சாராரும் ஒரு நல்ல முடிவிற்கு வரமுடியும்.விடுதலைப்புலிகளின் இந்த ஆதங்கங்கள் போக்கடிக்கப்படும் என்ற உறுதிமொழியை சர்வதேச சமூகம், குறிப்பாக ஜப்பானும் மெரிக்காவும் வழங்க முடியும். அப்படியான ஒரு உத்தரவாதத்தை இவர்கள் வழங்குவார்களேயானால் விடுதலைப்புலிகள் அதனை நிச்சயம் பரிசீலனைக்கு எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

இதன் மூலம் டோக்கியோ நாட்டுக்கு விடுதலைப் புலிகளின் பங்களிப்பை உறுதிசெய்ய முடியும் என்றும், இவர்கள் தரும் இந்த வாக்குறுதி புலிகளை அரசு வஞ்சிக்க மாட்டாது என்பதை நிச்சயப்படுத்துவதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிசாரின் மனித உரிமை மீறலை விசாரிக்க மூன்று பொலிஸ் பிரிவுகள்!

(கொழும்பு)

மனிதஉரிமை மீறல்தொடர்பாக பொலிசாருக்கு எதிராகப் பொது மக்கள் செய்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மூன்று பொலிஸ் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான வாக்கு மூலங்களை பதிவு செய்து விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக மேற்படி முறைப்பாடு செய்துள்ளவர்களை பிரஸ்தாப பொலிஸ்பிரிவு முன் ஆஜராகுமாறு பொலிஸ், பொதுமக்கள் நல்லுறவுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.பெரேரா கேட்டுள்ளார்.

மேற்படி மூன்று பொலிஸ் பிரிவுகளிற்கும் தொடர்புகொள்ள வசதியாக தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அக்ரம் ஓய்வு!

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப் பந்து வீச்சாளருமான வசீம் அக்ரம் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.



17 வருட காலமாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இவர் உலகின் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் முன்னணி வகிக்கின்றார்.

34 வயதான வசீம் அக்ரம் 356 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடி 502 விக் கெட்டுக்களைக் கைப்பற்றி யுள்ளார். அத்தோடு 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 414 விக்கெட்டுக் களையும் கைப்பற்றியுள்ளார்.

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் 1996,97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிம்பாப்வே அணிக்கு எதிராக 257 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது பெற்றது. இவர் ஒரு போட்டியில் பெற்ற ஆகக் கூடிய ஓட்டங்களாக இருந்தது.

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இவர் ஆகக் கூடுதலாக ஒரு நாள் போட்டியில் 96 ஓட்டங்களைப் பெற்றார்.

# 2–வது போட்டியில் 8 விக்கட்டுக்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வி

அவுஸ்திரேலிய மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் கிங்ஸ்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணியை இலகுவாகத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரிக்காடோ பவல் 32 ஓட்டங்களையும் பாங்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரர் மெக்ராத் துல்லியமாகப் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

பிரெட்லி, பிச்சல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலியா 35.1 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரிக்கிபொண்டிங் ஆட்டம் இழக்காது 57 ஓட்டங்களையும் சேடன் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் மூலம் ஏழு ஒரு நாள் போட்டிகளைக்கொண்ட தொடரில் 2-0 என்ற ரீதியில் அவுஸ். அணி முன்னணி வகிக்கின்றது.

அடுத்தபோட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி சென்லூஸ்சியஸ்சில் இடம்பெறும்.

## ஹிம்ஜிஸ்சேஷ் சம்பியனானார்!

இத்தாலியில் நடைபெற்ற ரோம் மார்ஸ்ராஸ் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டத்தை பெல்ஜியம் வீராங்கனை ஹிம்ஜிஸ்சேஷ் தட்டிச் சென்றுள்ளார்.

ரோமில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவந்த இப்போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பெல்ஜியம் வீராங்கனை ஹிம்ஜிஸ்சேசும், பிரான்ஸின் மாடஸ்தினியும் மோதினார்கள்.

3:6, 7:6, 6:0 செட்களில் மாடஸ்தினியை ஹிம்ஜிஸ்ஷேஸ் வீழ்த்தினார்.

## நியூசிலாந்து அணி வெற்றி

தம்புள்ளையில், நடைபெற்றுவரும் மும்முனைக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் சிறிலங்கா அணியை நியூசிலாந்து அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் ஆடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு ஆடிய சிறிலங்கா அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டுள்ளது.



# களுத்துறையில் உண்ணாவிரதிகளின் உடல் நிலை மோசமடைகின்றது

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரையிலான உண்ணா விரதம் இருந்துவரும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை மோசமடைந்துள்ளது.

சகோதரர்களான இராமையா சுரேந்திரன், இராமையா இரவீந்திரன் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த கிருஸ்ணன் சிவரஞ்சன் ஆகியோரே சிறைச்சாலைக் கூரை மீது இருந்த வண்ணம் சாகும்வரையிலான உண்ணாவிரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வார காலமாக கொட்டும் மழையிலும், பனியிலும், வெயிலிலும் சாகும்வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இவர்களின் உடல் நிலை கவலைக் கிடமாக உள்ளது.

சிறிலங்காவின் சட்டமா அதிபரோ, நீதியரசர்களோ தமது விடுதலைக்கு உத்தரவாதம் தர வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# க. பொ.த.(உ/த) பரீட்சை வரும் சனி, ஞாயிறு தினங்களில்

(கொழும்பு)

தென்பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளதையடுத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நேற்றும், இன்றும் நடைபெறவிருந்த பரீட்சைகள் பின்போடப்பட்டுள்ளன.

இவ்விரு நாட்களிலும் நடைபெறவிருந்த பரீட்சைகள் வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் குறித்த பரீட்சை நிலையங்களில் குறித்த நேரத்தில் நடத்துவதென்றும் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

## சிறிலங்கா படையினரால்

# சுழிபுரம் கடற்கரைப் பகுதி பனைகள் முற்றாக அழிப்பு!

(வடமராட்சி)

சுழிபுரம் கடற்கரைப் பகுதியில் உள்ள பனை மரங்கள் யாவும் சிறிலங்கா படையினரால் கடந்த இரு தினங்களாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இப் பனைமரங்களை அழிக்கும் படையினர் அவற்றை எடுத்துச் சென்று முகாம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

தமது பனைமர அழிப்பு தொடர்பாக மக்கள் அறிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக அப்பகுதியில் உள்ள எஞ்சிய இடங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

கடற்கரையோரமாக உள்ள பொதுமக்களின் காணிகளில் உள்ள பனை மரங்களே அழிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

யாழ். குடாநாட்டில் உள்ள பனை மரங்கள் அழிக்கப்படமாட்டாது எனப் படையினர் பொதுமக்களுக்கு உறுதிவழங்கி இருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (27)

# சனாதிபதி நிதியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர பிரதமர் ரணில் நடவடிக்கை

(கொழும்பு)

சனாதிபதி நிதியத்தை அரசின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர சிறிலங்காப் பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் சனாதிபதி நிதியத்தையும், அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்ட திட்டங்களையும் மாற்றுவது குறித்து ஆராய மூவர் கொண்டகுழு ஒன்றை பிரதமர் நியமித்துள்ளார்.

சனாதிபதியின் அதிகாரத்தை விட நாடாளுமன்ற மேலாண்மையை நிலைநாட்டும் நோக்கிலேயே பிரதமர் இந்த நடவடிக்கையில் இறங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஆராய அமைச்சர்களான கே.என். சொக்சி, திலக் மாரப்பன மற்றும் சிறிலங்கா விமானப் போக்கு வரத்து நிறுவனத்தின் தலைவர் தயா வெல்பொல ஆகியோரையே பிரதமர் நியமித்துள்ளார்.

சனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபை நிதிவழங்கவில்லை எனக் கூறியே அச்சபையை சனாதிபதி பொறுப் பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராசிக்குழு உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ராசிக்குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.புதுநகர் என்ற இடத்தில் நேற்று பகல் 1.00மணிக்கு இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.திமிலை தீவு லிங்கநாதன் கடைவீதியைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி நவசூரியம் (வயது-30) என்பவரே பலியானவராவார். வவுணதீவு படைமுகாமுக்கு சமீபமாக உள்ள காவலரணில் கடமை புரியும் இவர் புதுநகருக்கு வந்த வேளையிலேயே துப்பாக்கிசூட்டிற்கு இலக்காகி காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்கையில் மரணமானார்.

# இஸ்ரேலில் இரு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் ஐவர் பலி; படையினர் உட்பட 18 பேர் காயம்!

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் நேற்று இரண்டு தற்கொலைத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இஸ்ரேலின் வடக்கு நகரான அஸ்ராவில் வர்த்தக நிலையப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் தற்கொலையாளி உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர். 15பேர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு முன்னர் காசா பள்ளத்தாக்கிலுள்ள யூதகுடியிருப்பு ஒன்றில் ஒருபலஸ்தீனர் சைக்கிள் குண்டு ஒன்றை வெடிக்கச் செய்ததில் மூன்று இஸ்ரேலி படையினர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலில் தொழில் செய்யும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர் இஸ்ரேலிற்குள் நுழைவதைத் தடைசெய்யும் வகையில் பொதுத் தடைஒன்றை இஸ்ரேல் அமுல் படுத்தியவேளையில் இந்தத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இரண்டு தற்கொலைத்தாக்குதல்களுடன் இரண்டு தினங்களில் ஐந்து தற்கொலைத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



காசா பகுதியில் நேற்றுநடைபெற்ற தற்கொலைத்தாக்குதலில் சேதமடைந்த இஸ்ரேலியஇராணுவ வாகனம்

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்!

### ஆ. அ. வங்கியின் இல.க்கான வதிவிடப் பிரதிநிதி

(கொழும்பு)

தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க தீர்க்கமான வழிவகைகளை அரசும் விடுதலைப்புலிகளும் எடுக்க வேண்டும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கீல் தெரிவித்தார்.

நேற்று வவுனியா மணியங்குளத்தில் பாலம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## முழுமையான.....

இரா. சம்பந்தன் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று நேற்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தது.இச்சந்திப்புக் குறித்து பி.பி.சி. தமிழோசைக்கு கருத்துக் கூறிய தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 13ஆம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து, அவர் எங்களிடம் தெரிவித்திருந்த சில பிரச்சினைகள் சம்பந்தமாக பிரதமருடன் நேற்றுப் பேசினோம்.

முக்கியமாக கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக புலிகளும் அரசும் ஒப்பந்தம் செய்து ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டனர். இருப்பினும் பேச்சுவார்த்தையின்போது அரசினால் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. அதேவேளை, சிரான் என்கின்ற உபகுழு வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் புனரமைத்துக் கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டது. இது ஓராண்டு காலத்திற்கென்றே உருவாக்கப்பட்டது. ஆறு மாத காலங்கள் தற்போது முடிந்துவிட்டது. அதற்கான பண உதவி செய்வதற்கென்று ஒரு நிதியம் உருவாக்குவதாக உறுதி மொழி அளிக்கப்பட்டிருந்தது. அதுவும் செயற்படுத்தப்படவில்லை.

ஒஸ்லோ மாநாட்டிலே 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்த சிரான் அமைப்பிற்குக் கொடுப்பதாக உறுதி மொழி அளிக்கப்பட்டிருந்தது. அதுகூட வந்து சேரவில்லை. இப்படியான சூழலில் டோக்கியோவில் நடைபெறப் போகின்ற மாநாட்டில் அங்கு கோடிக்கணக்கான டொலர்கள் கொடுக்கப்படுகின்ற ஒரு பாரிய மாநாட்டிலே அதிருப்தியான ஒரு சூழ் நிலையில் அவநம்பிக்கையான ஒரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் எப்படிக் கலந்து கொள்வது? எனவே, அதற்கு முன்பு இவற்றையெல்லாம் சீரமைத்து ஒரு முழுமையான நிதி நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அமைத்து அதிலே விடுதலைப் புலிகள் பாரிய பொறுப்பை செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதைப் பற்றித்தான் நாம் பிரதமருடன் கதைத்தோம்.

பிரதமர் சில பிரச்சினைகள் இருக்கின்றது என்று ஏற்றுக்கொள்கின்றார். எனவே, எப்படியான கட்டமைப்பு வேண்டும் என்பதுதான் இப்பொழுது கேள்வியாகவுள்ளது. எம்மைப் பொறுத்தவரை நாங்கள் பிரதமரிடம் கூறினோம். அதாவது, ஒன்று - வடக்கு - கிழக்கிற்கு உலக நாடுகளால் வழங்கப்படுகின்ற பணம் வடக்கு - கிழக்கிற்கென்றே கொடுக்கப்பட வேண்டும். அதற்கென ஒரு நிதியம் அமைக்கப்பட வேண்டும். அந்த நிதியத்திலிருக்கின்ற பணம், அவற்றை எப்படி எந்தெந்தத் திட்டங்களுக்குச் செலவு செய்வது என்ற அந்த பொறுப்பு விடுதலைப் புலிகளின் கையிலேயே இருக்க வேண்டும்.

(கொடுக்கப்படுகின்ற நிதி உண்மையில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலே செலவு செய்யப்பட வேண்டும். ஏனென்றால், கடந்த காலங்களில் அப்படி நடைபெறவில்லை. அப்படிக் கொடுக்கப்பட்ட நிதிகள் பல யுத்தத்திற்காகப் பயன்படுத்திய அனுபவம் எமக்குண்டு. விடுதலைப் புலிகளும் அறிந்துள்ளார்கள்.

புலிகள் அரசின் அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் அமைப்பின் கீழ் வருகின்ற எந்தவொரு கட்டமைப்பும் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. இப்படியானதொரு சூழலில் அதற்கப்பால் வேறு நாடுகளிலே, சூடான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலே இடைக்கால நிர்வாகம் போன்றதொரு அமைப்பு செயற்படுத்தப்பட்டிருக்கின்றது. அப்படியானதொரு திட்டத்தை உருவாக்கி, அப்படியான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு அதில் புலிகளுக்கு அதிகாரம், அவற்றை நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள் எல்லாம் அவர்களின் கையிலே இருக்கக் கூடியளவிற்கு செயற்படுத்தப்பட வேண்டும்.

இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நாங்கள் எடுக்கின்ற முயற்சியில் நாம் ஒருவேளை வெற்றி பெறவில்லையென்றால் டோக்கியோ மாநாட்டை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்போம்.

## லெப்.....

போராளிகள் வீரச்சாவடைந்திருந்தனர்.இந்த நினைவு தினம் எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.இதனையொட்டி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பிரதான நிகழ்வு மட்டக்களப்பு தரவையில் இடம் பெறவுள்ளது. அன்றையதினம் வீரச்சாவடைந்த போராளிகளின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிப்பதுடன் வினோதன் படையணியின் விசேட அணிவகுப்பு மரியாதையும் இடம் பெறும்.

## இந்தியா.....

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி, மாத்தறை, தெனியாய பிரதேசங்களை கெல்ஹேரசன் பார்வையிட்ட பின்னர் இந்த உதவித் தொகையை வழங்கியுள்ளார்.

இதற்கு பிரதமர் கெல்ஹேரசனுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா. சபை உணவு, மருந்துப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளது.ஐ.நா. சபையின் இலங்கைக்கான பிரதிநிதி இவ் உதவி குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் மீட்புக் கப்பல் ஒன்றை வழங்க முன்வந்துள்ளது. இதில் உலங்கு வானூர்தி வசதிகளும் சுழியோடிகள் ஒன்பது பேரும் உள்ளனர். அத்துடன் உணவு, மருந்துப் படகுகள் ஏனைய அவசர உதவிகளை வழங்கவும் இந்தியா முன்வந்துள்ளது.

## தென் பகுதி.....

சம் மக்கள் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.அவலப்படும் இம்மக்களுக்கு உதவுவதற்காக நேற்று முதல் பொருள் சேகரிப்புப் பணியினை கிளிநொச்சி தமிழர் எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டனர்.

தென்னிலங்கை மக்களுக்கு உதவும் வகையில் கிளிநொச்சி வாழ் மக்கள் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

மன்னாரிலும் தமிழர்எழுச்சிப் பேரவையினர் பொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கனத்த.....

பகுதியிலுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கப் பட்டுள்ளது.மத்துகம,அகலவத்த, கலவான பகுதிகளில் பெருமளவு கிராமங்கள்வெள்ளம்காரணமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டு ள்ளது. இதனால் கூரைகளிலும் மரங்களிலும் ஏறியிருக்கும் மக்களைக் காப்பாற்ற முடியாதுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நில்வள கங்கை மேவிப் பாய்வதால் மாத்தறையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. மாத்தறையில் நீர்விநியோக அமைப்பு நீரில் மூழ்கியுள்ளதால் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் முதலைகளாலும் மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப் பட்டுள்ள இரத்தினபுரி உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு கடற்படையைச் சேர்ந்த விசேட குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த கடற்படையினரில் தொண்ணூறு வீதமானோர் சுழியோடிகளாவர்.தொடர்ந்தும் மீட்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இடம்பெயர்ந்து தங்கி இருக்கும் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினரும், உதவி வழங்கும் அமைப்புக்களும், அரசாங்கமும் உணவுப் பொருட்களையும் இதர உதவிகளையும் வழங்கி வருகின்றன.

இவர்களுக்கு உதவவென கப்பல் ஒன்றின் மூலம் இந்தியாவில் இருந்து மீட்புப் பணிக்கான படகுகளும் மற்றும் மருந்து உள்ளிட்ட உதவிப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறிலங்கா பிரதமர் உட்பட முக்கிய அமைச்சர்களும் நேற்றுச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.